344

தென்றல்

விலை 16 புதிய காசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 5 | சென்னை 25-10-58 சனிக்கிழமை | இதழ் 19

198389
25 OCT 1958
சென்னை-600 0
MADRAS

கம்யூனிஸ்டுகளின் கடந்த காலக் கதை

தடுமாற்றத்தில் தத்தளிக்கும் தமிழ்நாட்டுக் 'காம்ரேடு'கள்!

கம்யூனிஸ்டுகளின் கடந்த காலம் பற்றிக் கணக்கிட்டுக் கூறுவது இன்றைய தினம் தேசியக் கௌன்சில் பெருமை பேசிக்கொண்டிருக்கும் அவர்களுடைய தன்மைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கப் பெருந்துணையாக இருக்கும். கம்யூனிஸ்டுகளின் மாபெரும் அரசியல் தவறுகளும் தடுமாற்றங்களும் கணக்கிலடங்கா. இதனைத் தோழர் மோகன்-திருவாளர் குமாரமங்கலம் ஜமீன்தார் அவர்கள்-நெல்லையில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் "கம்யூனிஸ்டுக்கட்சி 1948-ம் ஆண்டுக்கு முன்பு பல தவறுகளைச் செய்துவிட்டது; ஆகவே 1948க்கு முன்புள்ள கட்சியின் நடவடிக்கைகளைப் பற்றிய கேள்விகளைத் தயவு செய்து கேட்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று பேசி உறுதிப்படுத்தியிருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றியும், திராவிட நாட்டுப் பிரச்சினையைப் பற்றியும் அவதூறு பேசுகின்ற உயர்ந்த மட்டத்திலிருக்கும் கம்யூனிஸ்டுத் தலைவர்கூட அறியமாட்டார்கள். கம்யூனிஸ்டுகளின் ஒட்டுமொத்தக் கணக்கீட்டிலே சிக்கித் தவிக்கும் பலருக்குப் பெருந்தலைவர்களின் சரணாகதிப் படலங்களைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டியது-அவர்களின் எதிர்காலத்திற்கு ஓர் சிவப்பு விளக்காகும். இந்தியக் கம்யூனிஸ்டுகளின் கடைசி வழிகாட்டியான தோழர் சங்கரன்-கேரளத்தின் முதலமைச்சர் இரண்டொரு நாட்களுக்குமுன் உயர் நீதிமன்றத்தில் அவதூறு பேசிய குற்றத்திற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்ட செய்தி, எல்லாத் தினஏடுகளிலும் வந்தது. ஆனால் 'ஜனசக்தி' மட்டும் "நம்பூதிரி பாட்டுக்கு கேரள நீதிபதி பாராட்டுதல்" என்று கொட்டை எழுத்துக்களில் விளம்பரப்படுத்தியது. இரண்டாண்டுகளுக்குமுன் 1956 செப்டம்பர் பதினைந்தாம் தேதியன்று வெளி வந்த எர்ணாகுளம் பத்திரிகை 'நவஜீவன்' இதழில் இந்தியக் கம்யூனிஸ்டுகளைப்பற்றி சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்.

"இந்தியக் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் கொள்கைகளில் சிறு சிறு தேவையான மாற்றங்களை அனுமதித்த போதிலும் ரஷ்யாவில் உருவாக்கப்பட்டிருக்கிற அரசு ஒன்றினால் மட்டுமே இந்தியாவில் சோசலிசத்தை நிர்மாணிக்க முடியும் என்று நம்பிக் கொண்டிருந்தோம். சீனா, கிழக்கு ஐரோப்பா, மற்றும் சில நாடுகளில் சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்த மாற்றங்களைக் கண்ணுற்றபோது இந்த எண்ணத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. ரஷ்யாவில் நடைபெறுபவை எல்லாம் சரியானவைதான் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். இதன் விளைவாக ரஷ்யாவைக் குறை கூறுவோர் எல்லாம், முதலாளிகளின் ஏஜண்டுகள் என்னும், ரஷ்ய சோசலிச முறையைக் கவிழ்ப்பதற்குத் திரை மறைவில் சதி செய்கிறார்கள் என்றும் கூறிக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போது சனநாயக கோஷங்களை எழுப்பிக்கொண்டு ரஷ்ய முறையைக் கண்டிப்பவர்களுக்கும், ரஷ்ய முறையை ஏற்றுக்கொள்கிற நேரத்திலேயே அதில் உள்ள குறைபாடுகளைக் களையவேண்டும் என்று கூறுவோர்களுக்கும் உள்ள வேறுபாட்டினை உணருகிறோம். இரண்டாவது கூறப்பட்டவர்களுடன் கைகோர்த்துக் கொள்ளலாம் என்றும் கருதுகிறோம். எங்கள் கொள்கையில் இரண்டு அம்சங்களில் மகத்தான தவறுசெய்துவிட்டோம்-" ஈ. எம். சங்கரன் நம்பூதிரிபாட் அவர்களின் இந்த விளக்கம், கம்யூனிஸ்டுகளின் கொள்கைக் குழப்பத்திற்கும் சுய சிந்தனையற்ற போக்கிற்கும் மிகச் சிறந்த சான்றாகும். தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்கு இந்த உண்மையை ஒப்புக்கொள்கிறீர்களா என்று ஒரு கேள்வியை அனுப்பினால் திருதிருவென்று விழித்து ஊமையாகிவிடுகிறார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வெள்ளையர் தாசர்கள் - நாவலர்கள் எல்லாம் ஆங்கில மோகிகள்-பெரியாருக்கு அழுகல் மூளை - இப்படி-அவர்களுக்கேயுரிய அழுகல் மொழிகளை வீசத் துவங்குவார்கள். 'நம்பூதிரிபாத்' சொன்னார் - தவறுகளைத் திருத்திக்கொள்ளவேண்டும் என்று. அதற்கு முன்னதாகவே "காங்கிரஸ் ஆட்சியாளருக்கு கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை மாறின பின்பும், தன்னலமற்ற கம்யூனிஸ்டு ஊழியர்களின் தண்டனைகளை ரத்து செய்வதற்கு இவர்களின் சட்ட உள்ளம் இடம்தர மறுக்கிறது" என்பதாக நெல்லைச் சதிவழக்கில் தண்டிக்கப்பட்ட தோழர்கள் - பாலதண்டாயுதம், மீனாட்சிநாதன், அருணாசலம் ஆகியோர் 2-11-53 ல் 'விடை கொடுங்கள்' என்று அச்சிட்டு வழங்கிய அறிக்கையிலே கண்ணீர் விட்டுக் கதறியிருக்கிறார்கள்! தண்டனைகள் கிடைத்தபின்பு கொள்கைகளை மாற்றிக்கொண்டார்களாம். கம்யூனிஸ்டுகளின் 'பல திக்குப் பார்வைகளை' மறந்துவிட வேண்டுமாம்.

இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தமிழ்நாட்டுக் கமிட்டி, காவலில் உள்ள கம்யூனிஸ்டுக் கைதிகளையெல்லாம் விடுதலை செய்ய வேண்டுமென்று, முதலமைச்சர் காமராஜர் அவர்களுக்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தது. அதிலும் "கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை மாறிய நிலையில் பொதுத் தேர்தல் வர இருக்கின்ற சூழ்நிலையில் கம்யூனிஸ்டுக் கைதிகளை உடனே விடுதலை செய்ய வேண்டுமெனக் கோருகிறோம்" என்பதாக 'ஜனசக்தி'யார்கள் தெரிவித்த இந்த வாக்கியம் அமிர்தசரஸ் மகாநாட்டிற்கு முன்னதாகவே இந்தச் சிவப்புத் தோழர்கள் தங்களின் வேடங்களைக் கலைக்கத் துவங்கி, காங்கிரஸ்காரர்களின் காலைப் பிடிக்கத் தயாராகியிருந்தார்கள் என்பதைத்தான் புலப்படுத்துகின்றது. 'ஜனசக்தி' பெரிய அளவு வெளியீட்டுக்குச் சிவஞானம் கம்பெனியார்கள் வாழ்த்துக் கூறியது போல-வார இதழாக இருந்த 'ஜனசக்தி' தினசரியான துவக்க விழாவில் ஆசிரியர்-ஜீவானந்தம் அவர்கள் 'நம்ம ராஜாஜி-நம் தலைவர் காமராஜர்' என்று குழைவு நெளிவுடன் தனக்குள்ள சாகச பாணியில் பேசி மயக்கிவிட முயன்றார்! காங்கிரஸ்காரர்களின் கருணைப் பார்வைக்கு, கம்யூனிஸ்டுக் கட்சியின் தன் மானத்தை விலையாக அடகு வைத்த பெருமை அவருக்குண்டு! ஏனைய "அகில இந்தியப் பெருமக்கள்"-இதற்கு எதுவும் ஆதரித்துப் பேசவில்லை. இந்தியக் கம்யூனிஸ்டுகளின் வரலாற்றை நினைத்தால்-இப்படியும் ஒரு கட்சியா-இதற்கும் சிலர் தலைவர்களா?" என்று கேட்கத் தோன்றும்.

மார்க்சியப் பண்புகளைக் கொண்டவர்களாக நடித்துக்கொள்ளும் கம்யூனிஸ்டுகளைப் பற்றியும் - அவர்களது அரசியல் இழிநிலையைக் குறித்தும் 3-2-54 மதுரையில் நடைபெற்ற நேதாஜி பிறந்த தின விழாப் பொதுக்கூட்டத்தில் பசும்பொன் உ. முத்துராமலிங்கர் அவர்கள் கீழ்க்காணும் செய்திகளைத் தெரிவித்தார்: "பொருளாதாரத்தைப் பற்றிப் பேசி, வெறும் இந்தியர்களை மட்டும் வைத்து நடத்தாமல், வெள்ளையர்களையும் துணைக்கு வைத்துக்கொண்டு கிளர்ச்சி செய்தது கம்யூனிஸ்ட் கட்சி. முதல் கம்யூனிஸ்ட் சதி வழக்கில் எதிரியாக இருந்தவன் ஒரு வெள்ளைக்காரன். கடைசி மனிதனாக இங்கு வந்தவனும் 'ஹாரிபாலிட்' என்ற வெள்ளைக்காரன்தான். இந்த நபர் லண்டன் தேர்தலில் ஜாமீனைப் பறிகொடுத்தான்........கம்யூனிஸ்ட் வாதியான பி. இராமமூர்த்தியை அரசாங்கம் தேடிய காலத்தில் அவர் வைத்தியநாதய்யர் வீட்டில் சில காலமாக மறைந்து வாழ்ந்தார். இப்படிப்பட்ட ஆசாமிகள் புரட்சியை நடத்தப்போகிறார்களாம்! வைத்தியநாதய்யர் பணக்காரர்களிடம் பணம் திரட்டுகிறாராம். ராமமூர்த்தி ஏழைகளிடம் வசூல் செய்கிறார். ராமமூர்த்தியைக் கைது செய்யப் போலீசார் எத்தனித்த காலத்தில், வைத்தியநாதய்யரின் கார், தஞ்சாவூர் ஜில்லாவில் கொண்டு போய் அவரை விட்டு விட்டு வந்தது. இதை நிரூபிக்க நான் தயார். ராமமூரத்தி ஒரு 'பிராமணர்' என்பதற்காக வைத்தியநாதய்யர் மறைத்து வைத்திருந்தார்! இதுதான் அரசியலில் கொள்கையை விற்பதாகும் - இவர்கள் புரட்சியை, நம்பிக் கெட்டவர்களும் லட்சோப லட்சம் மக்கள் இருக்கிறார்கள்."

— 7-ம் பக்கம் —

கவியரங்கில்...

கண்ணதாசன்

முன்னுரை

ஆரும் மொழிப் பெருமை
அள்ளித் தந்தார் கவிஞர்!
வீரம் அடுத்தபடி! வியப்பில்லை தமிழோடு
சேர்ந்த பிறப்பன்றோ தென்னாட்டில் மாவீரம்
அவ்வீரம் பற்றி அழகு தமிழ்க்கவிஞர்
துறையூர் அலியார் நற்சொல்
பொழிவார் இவ் வவையில்!

தமிழ் வீரம்

- துறையூர் ந. அலி -

முல்லை மணத்தை முகந்துவரும் தென்றலுக்குச்
சொல்லாட்சி கூட்டும் தலைவா! அடியேனின்
தாழ்ந்த வணக்கம். தலைநிமிர்ந்த மாமதுரை
வாழ்ந்த பழங்கதைக்கு மெய்யான நற்சான்றாய்
இங்கே அமர்ந்து இனிய கவிகேட்கும்
உங்கள் கனிவான உள்ளத்திற் கென்வணக்கம்.
பூநாறு தாங்கிப் பொழிலோரம் பாய்ந்துசெலும்
தேனாற்றின் ஓரம் சிலையாய் அமர்ந்திருந்தேன்
எத்தனையோ கற்பனைகள் ஈசல் படைபோல
தத்திப் பறந்து சிறகொடிந்து வீழ்ந்திறக்க
ஒன்றுமட்டும் என்னுளத்தில் ஓடாத நீர்நிலையாய்
நின்றிருக்கக் கண்டேன் நிலவெரிக்கும் முன்னிரவு
தங்கக் கழல்பூண்டு தார்பூண்டு தன்கையில்
திங்கள் ஒளிவீசும் தேய்ந்த கொடுவாளைச்
சேர்த்துப் பிடித்தொருவன் சித்திரம்போல் நின்றிருந்தான்
ஆரென்று கேட்டு அடிமேல் அடிவைத்து
முன்சென்று பார்த்தேன் முகமெல்லாம் காயங்கள்.
என்னென்று கேட்டு இதயக் கதவத்தில்
கைவைத்தேன் அங்கே கனன்ற பெருவடுக்கள்
நெய்வைத்த கிண்ணம் நெருப்பில் விழுந்ததைப்போல்
உள்ளம் எரிய உடலம் கொதிப்பேற
தள்ளாடி நின்றேன் தரைபார்த்து நின்ற அவன்
மெள்ள நகைத்து முருக்கவிழ்ந்த ஆம்பல்போல்
கிள்ளை மொழிபேசக் கொவ்வை இதழ்திறந்தான்:
"நெஞ்சில் தமிழ்வீரம் நேத்திரத்தில் செந்தமிழ்நீர்
தஞ்சம் புகுந்தோர்க்குத் தன்னுயிரை ஈந்தபெருஞ்
செந்தமிழர் வாழ்ந்த சிறப்பான காலத்தில்
விந்தியத்தின் உச்சி விளிம்பில் விளையாடி
மன்பதையைக் காத்த மறவன் தமிழன்நான்
தென்புலத்தைப் பார்த்துச் சிரித்த வடநாட்டு
கங்கைக் கரையடக்கிக் காவிரியின் மேன்மையினைத்
தங்கு வளமுடைய செந்தமிழில் சித்தரித்தேன்
பாவாணர் நாவில் பொருந்தி நடம்பயின்று
காவலரின் செங்கோல் கரத்தேந்தி வீற்றிருந்த
மூவாத் தமிழின் முதுபுகழைக் கேட்டறியா
நாவன்மை இல்லாத நச்சரவ ஆரியத்தின்
பல்லைப் பிடுங்கிப் பலரறிய பைந்தமிழின்
வல்லமையைக் காட்ட வடஇமயம் நான்சென்றேன்
சிங்கப் படைமுன்னம் சிற்றெலிகள் என்செய்யும்?
சங்கத் தமிழ்வீரம் சாகா வரமன்றோ?
சீராரும் சங்கத் தமிழைப் பழித்துரைத்த
ஆரியரின் சென்னியின்மேல் ஆரணங்கு கண்ணகிக்குக்
கோவில் தனைஎழுப்பக் கல்லேற்றி மீன்கொடியை
மேவி இமயத்தில் வெற்றிக் கிலக்கணமாய்
நட்டேன் மகிழ்ந்தேன் நலிவைத் துடைத்திட்டுப்
பட்டத்து யானைப் படைவரிசை முன்செல்ல
வெற்றிக் களிப்போடு வீடுதிரும்பி வந்தேன்
மற்று மொருமன்னன் வங்கப் படைவலியால்
ஈழத்தை வென்று எழில்சேர் புலிக்கொடியை
ஆழத்தில் நட்டு அருந்தமிழின் சீர்காத்தான்
நெஞ்சில் பதிந்த நெடுவேல் நுனிதாங்கி
குஞ்சரத்தை வெட்டிக் குருதிக் களத்தினிலே
தன்னுயிரை ஈந்துத் தமிழ்மண்ணின் வீரத்தை
விண்முட்டச் செய்த மறவர் பரம்பரைநாம்
நேருக்கு நேர்நின்று நீதி தவறாமல்
போராடும் பண்பு பழகுதமிழ் நற்பண்பு
பின்னால் மறைந்திருந்து போராடும் கீழ்ப்பண்பைக்
கன்னித் தமிழ்நாட்டார் கைக்கொண்ட தில்லை
புறப்புண்ணுக் கஞ்சிப் புவியில் உயிர்நீத்த
மறவர் குலம்வாழும் மாண்புமிக்க பொன்னாடு
அஞ்சியஞ்சிச் சாகாது ஆண்மை உருக்கொண்டு
வஞ்சனையை வென்ற வளமார் திருவிடத்தார்
மூச்சுக்கு மூச்சு முழங்குதமிழ்ப் பேர்சொல்லி
வீச்சுக்கோர் ஆள்வீதம் வீழ்த்தித் தமிழ்வீரம்
பாரில் சிறக்க அவன்பட்ட பாடெல்லாம்
ஆர்பட்டார் சற்றே அகத்தில் நினைத்துப்பார்
நீலத் திரைக்கடலின் நீரலையை வென்றடக்கி
ஞாலம் புகழ்பாட நன்கு அரசாண்டான்
அந்தத் தமிழ்வீரம் ஆர்கொண்டு போனாரோ?
மந்தைப் பசுப்போல வாழ்கின்றார் செந்தமிழர்
கூட்டில் அடைபட்ட கொஞ்சும் கிளிபோல
பூட்டியதோர் வீட்டில் புலம்பித் தவிக்கின்றார்
தங்க விலங்கென்றால் தாரணியில் ஆரேனும்
செங்கரம் நீட்டிச் சிரித்து அணிவாரோ?
மானம் பெரிதென்று வாழ்ந்த தமிழனின்று
ஈனச் செயலில் இறங்கியதை நான்எண்ணி
நெஞ்சம் நெகிழ்கின்றேன் நித்திரையோ என்விழியில்
கிஞ்சிற்றும் இல்லை கிழட்டுப் புலிபோலச்
சீறித் திரிகின்றேன் செந்தமிழர் எல்லோரும்
ஊறிக் கிடக்கும் உலர்ந்த இலைபோல
வீர உணர்வும் விரிந்த மனவலியும்
பார எறியும் படைபலமும் இல்லாமல்
வீழ்ந்து கிடக்கின்றார் வெற்றுரையைப் பேசுகிறார்
தாழ்ந்த நிலையெண்ணிச் சாகாமல் வாழ்கின்றார்
வேலுக்கு அஞ்சி விழியை இமைக்காத
சீலன் அருஞ்செயலைத் தேன்போல் சுவைத்திருந்தும்
பாலன் அருஞ்செயலைப் பண்ணில் இசைத்திருந்தும்
ஆளும் துரைத்தனத்தார் ஆட்டிவைக்கும் பொம்மைபோல்
நாளும் சுழல்கின்றார் நத்திப் பிழைக்கின்றார்
ஏனிந்த வாழ்வு இதுவா தமிழ்வீரம்?
நானிந்த வாழ்வை நினைத்து அழுகின்றேன்
கப்பல் கவிழ்ந்து கடலில் தவிப்பவன்போல்
அப்பால் இலங்கையினை ஆண்ட தமிழ்க்காளை
கண்ணீர் வடித்துக் கதறி அழுகின்றான்
செந்நீர் தனைத்துடைக்கச் செல்வார் எவருமில்லை
மூவுலகும் ஏத்த முழுதுல காண்டதமிழ்ப்
பாவை கதறி பதைபதைத்து நிற்கின்றாள்
அந்தோ தமிழ்மகனே ஆரோ வளர்த்துவிட்ட
இந்தி மொழியாளை ஏத்தித் திரிகின்றாய்
காரும் கடலலையும் காசினியில் உள்ளவரை
சீரும் சிறப்பும் சிறிதளவும் குன்றாத
மங்காத் தமிழ்வீரம் மாசுபடல் நன்றாமோ?
சிங்கத் தமிழ்மறவா! தூங்காதே சீறிஎழு!
சிந்தை குளிர தனியரசு பெற்றால்தான்
செந்தமிழ் வாழும் தமிழ்வீரம் நின்றிலங்கும்
ஆரியத்தின் வேரை அறுத்தெறிந்துத் தன்மான
வீரியத்தைக் காக்க விரைந்தோடிப் போரிடுவோம்!
முல்லை மலர்க்காட்டில் மேயும் எருமைகளின்
தொல்லையினை நீக்கித் தனித்தமிழின் சீர்காப்போம்!
அண்டிப் பிழைக்கவந்த ஆரியர்கள் ஆட்சியின்கீழ்
தண்டமிழர் நாட்டைத் தவிக்கவிட்டுத் தூங்குவதா?
கண்மூடித் தூங்கும் கலைஞானப் பெட்டகமே
விண்ணதிரச் செல்லும் மறவர் அணியைப்பார்!
கூர்வாளை வீசிக் குழுவாய் செலும்வீரர்
ஆர்ப்பரித்தல் கேட்டும் அரைத்தூக்கம் நீங்கிலையோ?
பொன்விலங்கைத் தூளாக்கிப் புத்துலகம் காண்பதற்கு
இன்னே புறப்படுவோம் எந்தமிழா தோள்தட்டு"
வார்த்தைக்கு வார்த்தை வரம்பிட்ட வீரச்சொல்
சேர்த்துப் படித்த சுவையான பண்கேட்டு
உள்ளம் குமுறி உணர்ச்சி வயப்பட்டு
மெள்ள தலைதூக்கி முன்னால் இருந்தவனை
நோக்கினேன் அந்தோ, நொடியில் புகையானான்!
பூக்குலையைத் தென்றல் பொலிவோ டணைத்ததனால்
எங்கும் இனியமணம்! நானும் இடம்விட்டு
கங்குல் எனக்களித்த கொங்குதமிழ் வீரத்தை
எண்ணி நடந்தேன் இனிது.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 25—10—58 ‖ இதழ் 19

எட்டரை இலட்சம்–எங்கே இடம்?

இலங்கையிலிருந்து திடுக்கிடத்தக்க–ஆனால் இப்படி நடக்கும் என்று பலரும் எதிர்பார்த்துக்கொண்டிருந்த செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது. இலங்கையிலிருந்து சுமார் எட்டரை இலட்சம் தமிழர்களை–இந்திய வம்சா வழியினர் எனப் பெயர் தரப்பட்டுள்ளவர்களை துரத்திவிட சிங்களவர் முடிவு செய்துவிட்டனர்.

இதுவரை சொல்வதா, கூடாதா என்று யோசனையில் வைத்துக்கொண்டிருந்த இந்தச் செய்தியை, இப்பொழுது தெரிவிப்பதா, பின்னால் தெரிவிப்பதா என்று வைத்துக்கொண்டிருந்த இந்த முடிவை கண்டியில் பேசிய பொதுக்கூட்டம் ஒன்றில், இலங்கையின் வர்த்தக அமைச்சரான ஆர். ஜி. சேனநாயகா வெளியிட்டுள்ளார்.

'ஒன்றரை இலட்சம் இந்திய வம்சா வழியினரை மட்டுமே இலங்கையின் குடிமக்களாக ஏற்றுக்கொள்ளுவோம்; அதற்குமேல் எவரையும் ஏற்க மாட்டோம்.

மொத்தம் உள்ள சுமார் 10 இலட்சம் பேரில், 50,000 பேர்களை மட்டுமே குடிமக்களாக ஏற்றுக்கொள்வதற்குக் காலஞ்சென்ற பிரதமர் டட்லி சேனநாயகா ஏற்பாடு செய்திருந்தார்; ஆனால் அந்த எண்ணிக்கையை பண்டா சர்க்கார் ஒன்றரை இலட்சமாக உயர்த்தியிருக்கிறது; இதற்குமேல் அந்த எண்ணிக்கையை வளர விடாமல் பார்த்துக்கொள்ள சர்க்கார் உறுதியான முடிவு செய்துள்ளது.

எல்லா 'இந்தியர்'களும் இலங்கைக் குடிமக்களாக ஏற்கப்பட்டால், அவர்கள் குடியிருக்கிற கண்டிதோட்டப் பிரதேசம் மட்டுமல்ல – இலங்கை முழுவதுமே 'இந்தியச் செல்வாக்'கிற்கு உட்பட்டுவிடும் அபாயமிருக்கிறது!

–என்று அவர் தெரிவித்துள்ளார்.

'குடிமக்களாக ஏற்றுக்கொள்ளாதவர்களை என்ன செய்ய உத்தேசம்?'

என்று கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து கேட்டதற்கு அவர் பின்வருமாறு பதில் சொல்லியிருக்கிறார்:

'இலங்கைக்குள் இந்தியர்கள் வருகிற கதவுகளைத்தான் நாங்கள் மூடி வைத்திருக்கிறோமே தவிர, இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கான கதவுகள் திறந்தே இருக்கின்றன. சர்க்காரின் அடுத்த நடவடிக்கை, இந்த வழியாக இந்தியர்கள் படிப்படியாகத் திரும்பிச் செல்ல வகை செய்வதே யாகும்.'

ஆர். ஜி. சேனநாயகாவின் இந்தக் குரலில் தொனிக்கும் ஆணவத்தை விட, அது காரணமாக அவதிப்படும் இலங்கைத் தமிழரின் பரிதாபத்திற்குரிய நிலைதான் நமக்கு இப்போது தெளிவாக விளங்குகிறது.

உலகத்தின் எந்தப் பகுதியிலும் தமிழர்கள் இன்றையதினம் அவதிப்படுகிறார்கள். எந்த நாட்டின் வளத்திற்கும், வாழ்வுக்கும் காரணமாக இருக்கும் அவர்களின் நிலையை எப்படி வர்ணிப்பது என்பதே தெரியவில்லை.

தமிழர்களற்ற இலங்கை மண் எத்தகையதாக இருந்தது; இருந்திருக்கும் என்பதை எல்லோருமே அறிவார்கள். வளங்குன்றியிருந்த இலங்கையை, வளமிக்க பூமியாக்கியவன் தமிழன். இன்று இலங்கையின் செல்வங்கள் என்று குறிக்கப்படும் தோட்டங்கள் அனைத்தும் தமிழனின் உழைப்பாலேயே உருவானவை. அந்த நாட்டின் வளத்திற்கான ஒவ்வொரு சொட்டு இரத்தமும் தமிழன் சிந்தியவை. இன்றைய நிலையில்கூட தமிழர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டு விட்டால், இலங்கை எப்படிப்பட்டதாக மாறும் என்பதை மனச்சாட்சியுள்ள ஒவ்வொரு சிங்களவரும் அறிவார்கள் எனினும், இன்று ஆள்கிற இலங்கையின் அரசாங்கம் மிகத் துணிவாகத் தமிழர்களை விரட்டிவிடத் துணிந்திருக்கிறது.

இதிலே மிகப் பயங்கரமானதாகத் தோன்றும் மற்றொரு பெரிய பிரச்சினை வெளியேறும் தமிழர்களைப் பற்றியதாகும். எட்டரை இலட்சம் பேர் அங்கிருந்து வெளியேறினால், அவர்களுக்கு என்னென்ன வசதிகள் இங்கே அளிக்கப்படும், யார் யார் அவர்களை ஆதரிப்பார்கள் என்பது நமக்குத் தெரியாததல்ல. வழக்கமாக இதுவரை இலங்கைத் தமிழர்களுக்குக் காட்டப்பட்ட 'கைவிரிப்பு'தான் இவர்களுக்கும் காட்டப்படுமோ என்று நாம் அஞ்சவேண்டியதிருக்கிறது. ஏனெனில் நம்மை ஆள்கிற டெல்லி ஆட்சியினரும் சரி, சென்னை அரசினரும் சரி கடந்த காலத்தில் அப்படித்தான் நடந்து வந்திருக்கிறார்கள்.

அந்த சோகத் தொடர்கதையின் அடுத்து வரும் அத்தியாயங்கள் கடந்து போனவை போலவே இருந்துவிடக்கூடாது என்பதே நம்முடைய மிகப் பெரும் கவலையாக இருக்கிறது.

இந்த நிலை மாற ஆவனவெல்லாம் செய்ய ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும்; அதற்கான தூண்டுதலைப் பொதுமக்கள் செய்யவேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

★ ★ ★

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

அமெரிக்கர் உதவிய நிதியில் பெரும்பகுதி ஆப்கானிஸ்தானத்தின் தேசிய வளர்ச்சிக்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. சுமார் 67 மில்லியன் டாலரை ஆப்கானிஸ்தானத்தின் ஹெல்மண்டு நதியில் அணைகட்ட கடனாகக் கொடுத்திருக்கிறது. இந்த அணை கட்டி முடிக்கப்பட்டால் ஆப்கானிஸ்தான் தன் உணவுத் தேவையை பூர்த்தி செய்துவிடும் என்று தெரிகிறது. இதைத் தவிர கொலம்பியாவை போமிங் சர்வகலாசாலைகளிலிருந்து சுமார் 80 ஆசிரியர்களைக் கொண்டு ஆப்கானிஸ்தான் சர்வகலாசாலையில் பயிற்றுவிக்கிறார்கள்.

ரஷ்யர்கள் ஆப்கானிஸ்தானத்தை தங்கள் பிடிப்பில் வைத்துக்கொள்ள ஆசைப்படுகிறார்கள். ஒரு நாட்டின் மீது இன்னொரு நாடு படையெடுத்து கைக்கொள்ளுவது என்ற காலம் கடந்துவிட்டதால் வல்லரசுகள் மேற்கண்ட பல வழிகளை கையாண்டு வருகின்றன. எகிப்து, இராக் போன்ற நாடுகளில் ஏற்பட்ட புரட்சியைப்போல் ஆப்கானிஸ்தானத்திலும் ஏற்படக் கூடாதா! அதன்மூலம் தங்களுக்கு வேண்டியவர்கள் ஆட்சிப் பொறுப்பில் ஏறமாட்டார்களா என்று ரஷ்யா ஏங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஆப்கானிய மக்களோ மன்னருக்கு விசுவாசிகளாக இருக்கிறார்கள்.

சகல அதிகாரங்களும் மன்னரிடம்தான் இருக்கிறது. குறைந்த அதிகாரங்களைக் கொண்ட தேசிய சட்டசபை ஒன்றும் பெயருக்கு இயங்கி வருகிறது. இந்நாட்டில் அரசியல் கட்சிகளும் கிடையாது. மக்கள் ஓட்டுப் போடும் முறையும் கிடையாது. தங்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையே தெரியாதபலர் இருக்கும்போது எப்படித் தேர்தல் நடைபெறும்?

மக்களின் வாழ்க்கைத்தரமோ மிகவும் மோசமான நிலையில் உள்ளன. சராசரி ஒரு தொழிலாளி மாதம் ஒன்றுக்கு கிட்டதட்ட 40 ரூபாய்தான் சம்பளமாகப் பெறுகிறான். இவர்களின் உணவு பெரும்பாலும் ரொட்டியும் அரிசியுமாகும். டீ ஒரு பவுண்டு ரூ. 2-8-0 அரிசி 1 பவுண்டு 12 அணா என்பதாக விற்கப்படுகிறது.

உடையைப் பொருத்தவரை ஒரு சாதாரணக் கோட்டு 13 ரூபாயாகிறது. ஆனால் கம்பளிக் கோட்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 65 ரூபாயாகிறது. குளிர்காலத்தில் இங்கு கம்பளிக்கோட்டு மிகவும் அவசியமாகிறது. பனிகாலத்தில் தரை பனியால் மூடப்படுகிறது. இதனால் விவசாயம் மிகக் குறைந்த அளவில் தான் செய்யமுடிகிறது.

பெண்களைப் பொருத்தவரை அவர்கள் வேலை செய்வதற்கே அனுமதிக்கப்படுவதில்லை. கடைகளில் சாமான்கள் வாங்குவதற்குக் கூட அனுமதிக்கப்படுவதில்லை. இவைகளை எல்லாம் தங்கள் கணவன்மார்களே செய்துவிடுகிறார்கள். ஆகவே பெண்கள் வீட்டுக்குள்ளேயே இருந்துவிடுகிறார்கள்.

சமீபத்தில் ஓர் ஆங்கிலமாது காபூலின் கடை ஒன்றில் சாமான்கள் வாங்குவதை நூற்றுக்கணக்கான மக்கள் நின்று வேடிக்கை பார்த்ததை பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அங்கத்தினர் ஜான் டக்டேவ் என்பவர் வியப்பாக கூறுகிறார்.

பெண்கள் வீட்டைவிட்டு வெளியில் வந்தாலும் அவர்கள் கண் பார்வை தெரியும் அளவுக்கு துவாரமிட்ட அங்கி அணிந்து வரவேண்டும் என்பது அவர்களின் நாட்டு வழக்கமாக இருந்து வருகிறது.

ஆகவே பரிதாபத்திற்குரிய இம்மக்களிடம் கருணை காட்டும் வல்லரசுகள் உலக யுத்தம் ஏற்பட்டால் ஏதோ ஒரு வல்லரசால் முதல் தாக்குதலுக்கு ஆளாகப் போகிறவர்கள் ஆப்கானியர்கள் தான்.

–நாகை வில்சன்

இடமின்மை காரணமாக இந்த இதழில்

'புலித்தேவனா, கட்டபொம்மனா?'

இடம் பெறவில்லை.

அடுத்த இதழில் அவசியம் வெளிவரும்!

ஊமையன் கோட்டை

கண்ணதாசன்

வேலுநாச்சியின் மரணத்துக்குப் பிறகு, மறவர்நாடு முழுவதிலும் மருதுபாண்டியர் புகழ் பெருகி வளர ஆரம்பித்தது. இந்தக் காலத்தில், இராமநாதபுரம் நாடு முழுக்க முழுக்க அடங்கிவிட்டது. பாஞ்சாலங்குறிச்சியும், சிவகெங்கையும் தான் வெள்ளையரின் கண்களை உறுத்திக்கொண்டிருந்தன.

பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டபொம்மன் வெள்ளையரை எதிர்த்ததற்கான காரணங்களைவிட, மருதுபாண்டியரின் எதிர்ப்புக்கான காரணங்கள் வலுவுள்ளவை. அதன்றியும், கட்டபொம்மனுக்கு இருந்த மக்கள் ஆதரவைவிட மருதுபாண்டியருக்கிருந்த ஆதரவு அதிகம். கட்டபொம்மன் படையில், படைவீரத்தைத் தொழிலாகக் கொண்டு ஊதியம் பெற்றவர்களே அதிகமாக இருந்தார்கள். மருதுபாண்டியரின் படைகள் அப்படிப்பட்டவையல்ல. சிவகெங்கை நாடு முழுவதிலும் இருந்த மறவர்குல வீரர்கள், தாங்களாகவே ஒரு குழுவை அமைத்துக்கொண்டு மருதரசருக்குப் பக்கபலமாக விளங்கினார்கள். போவலூரில் ஒரு படை, சூரத்தூரில் ஒரு படை, கன்னங்குடியில் ஒரு படை, திருப்பாலக்குடியில் ஒரு படை, கலையூரில் ஒருபடை, மண்டலக்கோட்டையில் ஒரு படை, ஓரியூரில் ஒருபடை, அரையத்தூரில் ஒருபடை, பெருவாக்கோட்டையில் மாயாண்டி சேர்வையின் தலைமையில் ஒருபடை, தேருபோகி நாட்டில் ஒருபடை, பள்ளிமடையில் சின்னச்சாமி சேர்வை தலைமையில் ஒரு படை, வாராப்பூர் நெடுவயலில் நன்னிமுத்துச்சாமி தலைமையில் ஒருபடை, அங்கேயே சசிவர்ணத்தேவனின் தலைமையில் ஒரு படை, திருப்பத்தூரில் வேல்முருகு சேர்வை தலைமையிலும், வயிரவ சேர்வை துணையிலும் ஒரு படை, முக்கூரில் உடையச் சேர்வை தலைமையில் ஒரு படை, அரண்மனை சிறு வயலில் நாகலிங்க சேர்வை தலைமையில் ஒரு படை, சின்னப்பூங்குடியில் ஒரு படை, காளையார்கோயிலில் ஒரு படை, இடையாத்தூர் சக்கப்பன் சேர்வை தலைமையில் ஒரு படை இப்படி சிறிய நாடான சிவகெங்கை நாட்டில் ஊருக்கு ஒரு பெரும் படை அரண்மனைப் பணத்தை எதிர்பாராமலே இருந்தது. வியக்கத்தக்க இந்தச் செய்தியை வரலாறு மறைத்துவிட்டது. மருதுபாண்டியருக்கு முன்னால் எந்த நாட்டு மன்னனுக்கும் இத்தகைய மக்கள் ஆதரவு இருந்ததில்லை.

படமாத்தூர் கௌரிவல்லப பெரியஉடையணத்தேவரையும், அவரை அண்டி நின்ற சிலரையும் தவிர, மருதுபாண்டியருக்கு விரோதிகள் யாருமில்லை. தேவர் சமூகத்தவர், சேர்வைக்கார சமூகத்தவர், அம்பலகாரர் சமூகத்தவர்—இந்த முக்குலத்தோரும் மருதரசரை ஆதரித்து நின்றனர். அதனால் கப்பம் என்ற பேச்சே வெள்ளையரிடமிருந்து எழாமலிருந்தது. அதுமட்டுமல்ல, மேஜர் வெல்ஸ்போன்ற அரசியல் அறிவுள்ள ஆங்கிலத் தளபதிகள் மருதிருவரை நண்பர்களாக்கிக் கொள்ளவே விரும்பினார்கள்.

வீரத்தேவன் சிவகெங்கைக்கு வந்த நேரம், ஆங்கிலேயர்கள் சிவகெங்கையிடத்தில் பயமும், பக்தியும் கொண்டிருந்த நேரம். மேஜர்வெல்ஸ் அடிக்கடி சிவகெங்கைக்கு வந்து, மருதுபாண்டியரின் விருந்தினராகத் தங்கி, நல்ல ஜாதிக் கோழிகளும், கோழி முட்டைகளும், கொழுகொழுத்த ஆடுகளும், தோல் தடிப்பான ஆரஞ்சுப் பழங்களும் வாங்கிக்கொண்டு போன காலம். ஆம்; மருதரசர் ஆங்கிலேயர்களை நண்பர்களாகவே கருதினார்கள். தங்களை ஆளுகின்ற உரிமையை, தங்களிடம் கப்பம் கேட்கும் உரிமையை ஆங்கிலேயர்கள் எந்த நாளிலும் பெறமுடியாதென்றே நம்பினார்கள்.

அடிமைத்தனம் துளியுமில்லாத சிவகெங்கையின் கோட்டையில் மகரக்கொடி பறந்தது. கோவில்களிலே தாசிப் பெண்களின் நாட்டியம். தெருக்களிலே கூத்துக்கள். அரண்மனை சலவைக் கல் மண்டபத்திலே கவிஞர் பெருங்கூட்டம். சாந்துப் புலவர், சவ்வாதுப்புலவர், சீனி சக்கரைப் புலவர், மதகுபட்டிப் புலவர், முத்துப்புலவர் இவர்கள் அனைவரும் மருதுபாண்டியரின் அவையை நிறப்பியவர்களில் சிலராவர். நாடு ஆனந்தக் கடலாக விளங்கிற்று. 'மயூரகிரிக் கோவை' போன்ற நூல்கள் இயற்றப்பட்டன. பழைய பாண்டிய மன்னர்களைப்போலவே, புலவர்களுக்குப் பொன்னும், மணியும்

அள்ளிக் கொடுத்தார் மருதரசர். பெரியமருதுபாண்டியர் இலக்கிய, இலக்கணம் பயின்றவர். எல்லாப் புலவர்களையுமே தன் அருகில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஆசைப்பட்டவர். புலவர்களுடைய பாடல்களுக்கு தாசிப்பெண்கள் அபிநயம் பிடிப்பது மருதரசர் காலத்தில் வழக்கத்தில் இருந்திருக்கிறது. அதற்கு முன்பெல்லாம், வெறும் தாள ஒலிகளும் பின்னணிப் பாடல் இல்லாத பாவங்களுமே நாட்டிய முறையாக இருந்து வந்தன. மருதுபாண்டியரிடம் முறையான நீதிமன்றம் இருந்தது. ஐவர் கூடித் தீர்ப்பளிக்கும் வழக்கம் இருந்தது. கிராமப் பஞ்சாயத்துகளில் தோல்வி கண்டவர்கள் அரசரிடம் அப்பீல் செய்யும் வழக்கம் இருந்தது. ஆனாலும் இந்த அப்பீல் குறைவாகவே இருந்தது. கிராமப் பஞ்சாயத்துகளே அவ்வளவு தெளிவான நீதியை வகுத்திருந்தன. சிவகெங்கை நாட்டிலேதான் ஜல்லிக்கட்டு என்றும், மஞ்சள்விரட்டு என்றும் வழங்கப்படும் வீர விளையாட்டு தொடர்ந்து உற்சாகமாக நடத்தப்பட்டு வந்தது. களவு மணம் எனப்படும் தமிழ்மரபும், போட்டியில் வென்று மணமுடிக்கும் மரபும் சிவகெங்கையைவிட்டு நீங்காமலிருந்தன. வழிப்போக்கர்களுக்கான விடுதிகள் சிவகெங்கை நாட்டிலேதான் அதிகம். பல பாதைகள் வந்து சந்திக்கும் இடத்தில் விடுதி இருந்தால், அதற்கு அரசாங்கத்தின் மானியம் உண்டு. மருதுபாண்டியர் காளையார்கோயில் காளீஸ்வரனைக் குலதெய்வமாகக் கொண்டு வணங்கியவர்கள் என்றாலும், பிற மதத்தினருக்குத் தாராளமாக இடங் கொடுத்தார்கள். திருப்பத்தூர்ப் பகுதியில் முஸ்லிம்களுக்கும், சருகணிப் பகுதியில் கிருஸ்தவர்களுக்கும் மானியங்களை அளித்திருக்கிறார்கள். இன்றும் இவற்றுக்கான செப்புப்பட்டயங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

அடுத்த இதழில்

தமிழ் கற்பு

எனும் தலைப்பில்
அரங்கேறிய
பெரி. சிவனடியான்
கவிதை வரும்.

மூத்த மருதுபாண்டியருக்கு நான்கு மனைவியர். இவர்களில் ஒருவர் நாயக்கவம்சத்தைச்சேர்ந்தவர். ஆயினும் பட்டத்துராணி ராக்காத்தாள் என்பவராவார். முகமதியர்களின் கோஷாப் பெண்களைப்போலவே, அந்தப்புரப் பெண்கள் பாதுகாக்கப்பட்டு வந்தார்கள். பெரும்பாலும் எல்லாப் பெண்களுக்கும் நீந்தத் தெரியும்; குதிரை சவாரி தெரியும்; வளரி எறியத் தெரியும். உடன்கட்டை ஏறும் பழக்கமும் இருந்தது.

சாந்துப்பொட்டுத் தளதளங்க
சந்தனப்பொட்டு கமகமங்க
மதுரைக்கோபுரம் தெரியக்
கட்டிய
மருது வாரதைப் பாருங்கடி

என்றும்,

கருமலையிலே கல்லெடுத்து
காளையார்கோயில்
உண்டுபண்ணி
மதுரைக்கோபுரம் தெரியக்
கட்டிய
மருதுவாரதைப் பாருங்கடி

-என்றும் மக்கள் பாடிப்பாடி மருதுபாண்டியரை வரவேற்றார்கள்.

இவ்வளவு செழிப்பாகவும், ஆனந்தமாகவும் விளங்கிய சிவகெங்கையில், மருதரசரிடம் பொறுமை கொண்ட படமாத்தூர் கௌரிவல்லபர் சிலதுரோகிகளை விளையாட விட்டிருந்தார். அவர்களில் சிலர், திருடர்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு அராஜகத்துக்குத் தூபமிட்டனர். வழிப்பறி நடத்தினர். கொலைகள் புரிந்தனர்.

ஒருதடவை, புதுக்கோட்டைத் தொண்டைமான் கொடுத்த பொருள்களோடு சிவகெங்கையை நோக்கி வந்துகொண்டிருந்த ஒரு புலவரையும், அவர் மனைவியையும் இந்தத் திருடர்கள் வழிமறித்துத் தாக்கினர். பொருள்களைப் பறித்தனர். புலவர் மனைவி கலங்கினாள். புலவர் பாடினார்:

† கள்ளன் கொடுத்ததைக்
கள்ளன் எடுத்தகன்றான்
உள்ளங் கடுத்தல் உறலாமோ—
வள்ளல்
மருதரசன் உள்ளான் மடலாய்
வறுமை
ஒருவ அருள்வான் உடன்.

இதேபோல், மற்றொரு புலவர் மனைவியின் தாலியைத் திருடர்கள் பறித்துச் சென்றார்கள். புலவர் மருதரசரிடம் வந்தார்.

'மருதையா! கணவன் அருகிலிருக்கும்போதே மனைவியின் தாலி அறுந்து போகலாமா? இரவிலே உனக்குச் செங்கோல் இல்லையா? இந்த நாட்டில் திருடர்களுக்கும் பங்கா?' என்று மனம் வெதும்பிக் கேட்டார். அந்தப் பாடல் இது:

மருவிருக்கும் கூந்தல் மனையாள்
கணவன்
அருகிருக்கத் தாலி அறுமா—
இரவுனக்கு
செங்கோல் இலையாஇத் தேச
தெசமெங்கும் கள்வருக்குப்
பங்கோ மருதுபூ பா.

மேற்குறித்த இரு புலவர்களையும் ஆற்றி, வேண்டிய பொருளுதவி செய்து மருதரசர் திருப்பியனுப்பினார். இதுபோன்றநிகழ்ச்சிகள் ஏராளம், ஏராளம்.

இத்தகைய சிவகெங்கையின் எல்லைக்கு வீரத்தேவன் வந்து சேர்ந்தான். குதிரைப் பயணத்தால் ஏற்பட்ட களைப்பு, மருதரசரிடம் உதவி கிடைக்குமோ கிடைக்காதோ என்ற கவலை, சிறை உடைப்புக்கான நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறதே என்னும் துடிப்பு இவற்றோடு சிவகெங்கையிலிருந்து மூன்று கல் தொலைவிலிருந்த வழிப்போக்கர் விடுதியில் வந்து தங்கினான் வீரத்தேவன். அழகிய அந்த விடுதி ஒரு வீடு போன்றது. அதன் காவல்காரர் பூரி ராமசாமித்தேவர் என்ற கிழவர். அவர் மனைவி கருப்பாயி ஆத்தாள் அவர்களுக்கு அஞ்சுகம் என்றொரு மகள். பூரி ராமசாமித்தேவர் முத்துவடுகத்தேவரின் படைக்கு உணவுப் பொருள்களைக் கொண்டு வந்து குவிக்கும் பணியிலிருந்தவர். முதுமை அந்த வேலையைச் செய்யவொட்டாமல் தடுத்ததால், மருதுபாண்டியர் ஆட்சிக்கு வந்ததும் விடுதி காவல் பொறுப்பை மேற்கொண்டார். இளகிய மனம் கொண்ட ராமசாமித்தேவருக்கு, பாஞ்சாலங்குறிச்சி யாரிடத்தில் அனுதாபம் உண்டு. சந்தர்ப்ப வசமாக வீரத்தேவன் அந்த விடுதியிலே தங்கினான்.

தேவர், வீரத்தேவனிடம் அனைத்தையும் விசாரித்தார். ஊமைத்துரையைப் பற்றித் தெரிந்துகொள்வதில் அதிக அக்கறை காட்டினார். அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போதுதான் அல்லங்காடியில் (இரவுச் சந்தை) காய்கறியும் மீனும் வாங்கிவர நகருக்குள் சென்றிருந்த அஞ்சுகம் வந்து சேர்ந்தாள். [illegible]க்கொண்டேயிருந்த

ஆசிரியர் கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

31-10-58.
மதுரை
(தியாகராசர் கல்லூரி)

1-11-58.
திருவில்லிபுத்தூர்
சிவகாசி

2-11-58.
விருதுநகர்
அருப்புக்கோட்டை

3-11-58.
கமுதி
முதுகுளத்தூர்

ராமசாமித் தேவர், மகளைக் கண்டதும் திரும்பி, 'ஆத்தா! என்ன இவ்வளவு நேரம்?' என்று கேட்டார்.

'தொண்டியிலேருந்து வண்டியெல்லாம் இப்பத்தான் அப்பா வந்துது; புது மீனு வாங்கிக்கினு வரலாமுண்ணு காத்துக்கிட்டிருந்தேன். நெறய வாங்கிட்டேன் அப்பா!' என்றாள் அஞ்சுகம்.

வீரத்தேவன் அவளையே முறைத்துப் பார்த்தபடி இருந்தான். அவன் மறவர் நாட்டைவிட்டு கம்பளத்து நாயக்கர்களோடேயே சுற்றிக்கொண்டிருந்ததால், புதிதாக மறவர் நாட்டுப் பெண்ணைப் பார்ப்பது அதிசயமாக இருந்தது அவனுக்கு. அந்தப் பார்வையில் நாணிய அஞ்சுகம், வேகமாக உள்ளே சென்றுவிட்டாள். கடமைக்கு வந்த இடத்தில் காதல் தன்னை இழுத்துக்கொள்ளும் என்று வீரத்தேவன் எண்ணியதில்லை. ஆனால் அன்றிரவு நடந்த சுவைமிக்க நிகழ்ச்சி, அவன் உள்ளத்தில் காதல் போதையையே ஏற்றிவிட்டது.

தொடரும்

† புதுக்கோட்டைத் தொண்டைமான் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

193389

★ ஆப்கானிஸ்தானமும் வல்லரசுகளும்! ★

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு பிரிட்டனுக்கு, ஐரோப்பாவிலும், ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிலும் இருந்த ஆதிக்கப் பிடிப்பு தகர்ந்து போனது-பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து விடுதலை பெற சின்னஞ்சிறு நாடுகள் முதல் இந்தியாபோன்ற பெரிய நாடுகள் வரை போராடி வெற்றியும் பெற்றன. அதே சமயம் இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு அமெரிக்காவின் செல்வாக்கு உலக அரங்கில் வெகுவாக உயர்ந்தன. உலக அரங்கில் பிரிட்டன் இழந்த செல்வாக்கை அமெரிக்கா கைப்பற்றியது. காலம் சென்ற பிரிட்டிஷ் நிதி இலாக்கா மந்திரி சர்-ஸ்டாபர்டு கிரிப்ஸ் கொழும்புவில் நடைபெற்ற காமன்வெல்த் "கொழும்புத் திட்ட" மாநாட்டில் ஒளிவு மறைவுயின்றி மேற்சொன்ன கருத்தை ஒத்துக்கொண்டார்.

பிரிட்டன் பல நாடுகளை தன் காலனி நாடுகளாக ஆட்டிப் படைத்த விதத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. ஆனால் அமெரிக்கா அந்த முறையை கையாள இருபதாம் நூற்ருண்டு இடம் கொடுக்கவில்லையென்ருலும், தன் வளமான செல்வத்தின் மூலம் பல நாடுகளின் ஆட்சிப் பொருப்பாளர்களை தன் கைப் பொம்மையாக ஆக்கி வைத்திருந்தது. ஆனல் அமெரிக்காவின் டாலரைக் காட்டி நாட்டை விலை பேசும் ராஜதந்திரமும் மக்களின் விடுதலைக் கிளர்ச்சி தீபட்டுப் பொசுங்கிய சம்பவங்கள் பல நிகழ்ந்திருக்கின்றன. இன்று அமெரிக்காவுக்குஎங்கு போனலும் எதிர்ப்பு உருவாகி இருப்பதைப் பார்க்கிருேம்.

அமெரிக்காவின் நிலைதான் இப்படி என்ருல் மற்ருெரு வல்லரசான ரஷ்யாவின் நிலை என்ன என்பதை ஆராய்வது பொருத்தமாகும். இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு பொருளாதாரத்தில் ரஷ்யா மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. ஆனலும் தன்னுடைய சுய முயற்சியால் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதிலும், தேசிய பாதுகாப்பை உருவாக்குவதிலும் வெற்றி பெற்றதை மறுக்கமுடியாது. இங்கிலையில் அமெரிக்கா பெற்றுள்ள செல்வாக்கை ரஷ்யாவினல் அடைய முடியாததற்குக் காரணம், மற்ற நாடுகளுக்கு பொருள் உதவி செய்து அதன்மூலம் அந்நாடுகளைத் தன் வசப்படுத்தமுடியாத அளவு பொருளாதாரத்தில் பலவினமாக இருந்தது. ஆகவே உலக அரங்கில் தன் செல்வாக்கை உருவாக்க ரஷ்யா வேறுமுறையைக் கையாண்டது. கம்யூனிச அகிலத்தை பரந்த முறையிலே ஒவ்வொரு நாடுகளிலும் பரப்பியது.

அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் போர் மூண்டால், ரஷ்யாவை எதிர்க்க அமெரிக்க கோஷ்டி நாடுகள் விரும்பினலும் அந்நாட்டு மக்கள் எதிர்க்கும் அளவுக்கு கம்யூனிசத்தை பரப்பினர்கள். இந்த வகையில் ரஷ்யா உலக அரங்கில் தன் பிடிப்பை வளர்த்து வந்தது. மேற்கண்ட கருத்தை நமது சொல்லின் செல்வர் சம்பத் அவர்கள் தி. மு. கழக முதல் மாநாடுசென்னையில் கூடியபோது "வல்லரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும்" என்ற தலைப்பில் பேசும்போது குறிப்பிட்டார்கள். அமெரிக்கா டாலரின் மூலம் பல நாடுகளை அடிமை கொள்ளுகிறது, அதேபோல் ரஷ்யா தன் கம்யூனிச பிரசாரத்தின் மூலம் பல நாடுகளை அடிமை கொள்ளுகிறது. ஆகவே இரு வல்லரசுகளும் நாடுகளை அடிமை கொள்ளும் எண்ணத்தை மாறுபட்ட இரு கோணங்களில் வைத்திருக்கிறது என்பதாக குறிப்பிட்டார். இது முற்றிலும் உண்மை என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

சமீப காலமாக ரஷ்யாவின்போக்கில் மாறுதல் அடைந்திருப்பதைக் கூறவே மேற்கண்ட விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அமெரிக்கா டாலரைக் காட்டி நாடுகளை தன் வசப்படுத்தும் முறையை சமீப காலமாக ரஷ்யாவும் கடைபிடித்து வருகிறது. இதற்கு உதாரணமாக அண்டை நாடான ஆப்கானி ஸ்தானத்தை எடுத்துக்கொள்ளலாம்.

இந்தியாவின் வடக்கே இமயமலைத் தொடரில் அமைந்த இந்தக் குஷ் மலையில் ஆப்கானிஸ்தான் இருக்கிறது. கடந்த 2000 ஆண்டுகளாக வெளிநாட்டார் இந்தியாமீது படையெடுத்தபோதெல்லாம் குறிப்பாக அலெக்ஸாண்டர் பாபர் ஆகியோருக்கு ஆப்கானிஸ்தான் வாசற்படியாக இருந்திருப்பதை சரித்திரம் கூறுகிறது. ஆப்கானிஸ்தானம் ரஷ்ய எல்லைக்கு மிக அருகில் இருக்கின்ற ஒரே ஒரு காரணத்தால் இன்று வல்லரசுகளின் மத்தியில் பெரியதொரு முக்கியத்துவத்தை உண்டாக்கியிருக்கிறது.

உலக யுத்தம் மூண்டால் ரஷ்யாவைத் தாக்க அமெரிக்கா ஆப்கானிஸ்தானத்தைப் பயன்படுத்திவிட்டால் என்ன செய்வது? என்ற பயத்தால்- உலக யுத்தம் ஏற்பட்டால் ரஷ்யாவைத் தாக்க ஆப்கானிஸ்தானம் சிறந்த ராணுவ கேந்திரம் என்பதால் அமெரிக்காவும்—ஆக இரு வல்லரசுகளும் போட்டி போட்டுக்கொண்டு ஆப்கானி ஸ்தானத்தை வட்டமிடுகிருர்கள்.

அமெரிக்காவும் ரஷ்யாவும் வெவ்வேறு வழியிலே கோடிக்கணக்கான டாலர்களை ஆப்கானிஸ்தானத்துக்குக் கொடுத்துள்ளார்கள். ஆப்கானிஸ்தானத்தின் வழியாக இந்தியா மீது படையெடுத்தவர்கள் இந்தக் குஷ்மலையைக் கடப்பதற்காகச் சில பாதைகளை அமைத்தார்கள். ஆனல் இது மிகக் குறைந்த அளவிலே மிகவும் வசதிக் குறைவாக இருந்தது. இந்தக்குஷ் மலையைச் சுற்றி சாலை அமைக்க ரஷ்யா முன் வந்து சர்வே நடத்தியது. கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தானத்தின் தலைநகரான காபூலுக்கு வடக்கே 50 மைல் நீளத்துக்கு சாலை அமைத்தனர். ரஷ்யா இதை வெற்றிகரமாக முடித்ததால் காபூலுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே சிறந்த பாதையை உருவாக்க முடிந்ததோடு ஆப்கானி ஸ்தானத்திலேயே சிறந்த சாலையான காபூல்-பெஷாவர் பாதையுடன் இணைக்க முடிந்தது.

அத்துடன் 2 சத விகித வட்டி வீதம் 8 வருட தவணையில் ரஷ்யா ஆப்கானிஸ்தானத்திற்கு 10 கோடி டாலர் கடன் கொடுத்திருக்கிறது. இதைத்தவிர ஆயுத உதவியும் அளித்திருக்கிறது. 100 டாங்கிகளும், போக்குவரத்திற்குப் பயன்படும் 4 விமானங்களும், 350 பீரங்கிகளும் மற்றும் வெடி மருந்துகளும் கொடுத்துதவியிருக்கிறது.

கடந்த 1955-ல் குருஷ்சேவும், புல்கானினும் இந்தியாவுக்கு வருகை தந்தபோது இவர்கள் ஆப்கானி ஸ்தானத்திற்கும் சென்றனர். இச் சமயம் பாக்கிஸ்தானத்தில் பக்டூனியர்கள் பக்டூனி ஸ்தானம் என்ற நாடு உருவாக வேண்டும் என்று போராடிக் கொண்டிருந்தனர். இதற்கு ஆப்கானிஸ்தான் தன் முழு ஆதரவையும் அளித்து வந்தது-ரஷ்யத் தலைவர்கள் புல்கானினும் குருசேவும் காஷ்மீருக்கு வந்தபோது, இந்தியாவுக்கு ஆதரவாக, காஷ்மீர் இந்தியாவுடன் இணைவதை ரஷ்யா முழு மனதுடன் ஆதரிக்கிறது என்று கூறினர்கள். ஆனல் சில காலத்திற்குப் பிறகு ஐக்கிய நாட்டு பந்தோபஸ்து சபையில் காஷ்மீர் பிரச்சினை வந்தபோது காஷ்மீர் பிரச்சினை தீர பாகிஸ்தானமும் இந்தியாவும் கூடிப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசியல் பல்டி அடித்தது. இது ஒருபுறமிருக்க- இதே முறையில் ஆப்கானி ஸ்தானத்துக்கு ஆதரவாக பக்டூனியர்கள் கேட்கும் பக்டூனி ஸ்தானத்தை ஆதரிப்பதாக குருஷ்சேவும், புல்கானினும் காபூலில் அறிக்கை விடுத்தார்கள்.

பாக்கிஸ்தானத்திலிருந்து "பக்டுனிஸ்தான்" உருவாக வேண்டும் என்பதை ரஷ்யத் தலைவர்கள் விரும்புகிருர்கள் - ஆனல் அவர்களின் தொண்டர்களான இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் இந்தியத் துணைக் கண்டத்தில் திராவிட நாடு உருவாவதை பாவம் என்று கருதுகிருர்கள் என்பதை சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

ஆப்கானிஸ்தானத்தின் ராணுவம் சுமார் 40 ஆயிரம் பேர்கள் கொண்டதாகும். இதைத் தவிர 20 ஆயிரம் பேர்களைக் கொண்ட போலீஸ் படையும் இருக்கிறது. இவர்களுக்கு ராணுவப்பயிற்சி அளிக்க ரஷ்யா தன் ராணுவ அதிகாரிகளையும் கொடுத்துதவியிருக்கிறது. ஆனல் ரஷ்யர்கள் விஷயத்தில் ஆப்கானிஸ்தான் மிக ஜாக்கிரதையாகவே இருக்கிறது. ஆப்கானிஸ்தானத்தின் ராணுவ யூனிட்டுகளில் எந்த ரஷ்யர்களும் அனுமதிக்கப்படுவதில்லை. ராணுவக் கல்லூரிகளில் ரஷ்ய அதிகாரிகள் சிவில் உடையணிந்தே பயிற்சி அளிக்கிருர்கள். இன்னும் கூறப்போனல் ரஷ்ய பார்வையாளர்கள் இங்கு வரும்போது ராணுவ யூனிட்டுகளின் வேலைகள்கூட நிறுத்திவைக்கப்படுகிறதாம். ஆப்கானிஸ்தானத்தின் இத்தகைய ரகசிய முறையால் ரஷ்யர்கள் கோபமும் முணு முணும்பும் கொள்வது ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனலும் ஆப்கானிஸ்தான் இதற்காகக் கவலைப்படுவதில்லை. ஆகவே ஒரு நாட்டுக்கும் இன்னெரு நாட்டுக்கும் முடிச்சுப் போட்டுக் குழப்பத்தை உண்டுபண்ணுவதில்கெட்டிக்காரர்களான ரஷ்யர்கள், ஆப்கானிஸ்தானத்தைப் பொருத்தவரை மாஜிகளாகிவிட்டனர் என்றே கூறலாம்.

ரஷ்யாவின் நிலை இதுவென்ருல் அமெரிக்காவின் நிலை என்ன என்பதை நோக்கும்போது ரஷ்யாவை விட அதிக அளவுக்கு ஆப்கானிஸ்தானத்தில் ஊடுருவியிருக்கிறது. அமெரிக்கா இந்நாட்டின் ராணுவத்திற்கும், அதன் தேசிய வளர்ச்சிக்கும் கோடிக்கணக்கான டாலர்களை வழங்கி இருக்கிறது. சுமார் 15 மில்லியன் டாலர் சிலவில் காந்தகாரில் மிகப் பெரிய விமான தளம் ஒன்றை கட்டியிருக்கிறது. ஐரோப்பாவிலிருந்து தூரக்கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் விமானங்கள் இங்கு தங்குவதற்கும் வசதியேற்பட்டிருக்கிறது. அதே சமயம் போர்க்காலத்தில் உபயோகப்படுத்திக்கொள்ளவும் வசதி படைத்திருக்கிறது. இந்த விமானக்கூடத்தை அமெரிக்கா, ரஷ்யாவில் தொழிற்சாலை மிகுந்த பகுதியான சைபீரியாவுக்கு சில நூறு மைல்கள் தொலைவில் கட்டியிருக்கிறது. "ஆர்யான" என்ற விமானப் போக்குவரத்துக் கம்பெனியிலும் 59 சத விகிதம் அமெரிக்கா பங்குதாரராக இருக்கிறது.

— 3-ம் பக்கம் —

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

உயர் திரு. முத்துராமலிங்கர் பேசியதையெல்லாம் நாம் ஒப்புக்கொள்ளவில்லை; நமக்கு அவரிடத்திலே கருத்து வேறுபாடுகள் பலவுண்டு. ஆனால் தோழர் ராமமூர்த்தியைப்பற்றிய இந்தப் பகிரங்கக் குற்றச்சாட்டினை எந்தக் கம்யூனிஸ்டும்-ராமமூர்த்தியார் உள்பட எவரும் மறுத்துக் கூறவில்லையாதலால் நாம் நம்பிக்மை கொள்வதிலே தவறில்லை! அகில இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வீரதீரப் பொதுச் செயலாளரும்-தமிழ்நாட்டுப் பிரமுகர்களும் இன்றைக்காவது இதனை மறுக்க முன் வருகிறார்களா? தோழர் ராமமூர்த்தியைப் பார்ப்பனக் கண்ணோட்டத்துடன்பார்த்து இந்தக் குற்றச்சாட்டைக் கூறவில்லை. பலருக்கும் உள்ள சந்தேகக் குறிகளிலே இந்த பொலிட்பீரோ தோழரின் அரசியல் அந்தரங்கமும் அடங்கியிருப்பதால் கேட்கவேண்டியுள்ளது. இன்னும் விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால், **"தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியில் மலையாளிகளும் பார்ப்பனர்களும் ஆதிக்கம் செலுத்துகிறபடியால், தமிழ்நாட்டில் தமிழர்களுடைய செல்வாக்கை கட்சி இழக்க நேரிடும்-என்று கட்சித் தலைமைப் பீடத்திற்கு தோழர் ஜீவானந்தம் 22 பக்கங்களில் ஒரு ரிப்போர்ட் வரைந்து அனுப்பினாராம். அதைக் கண்ட கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியினர் "நீ பழைய சுயமரியாதைக்காரன் உனக்கு இன்னும் அந்த வாடை இருக்கிறது. இதை வாபஸ் வாங்கி, மன்னிப்புக் கேட்காவிட்டால் கட்சியிலிருந்து வெளியேற்றுவோம்' என்று எச்சரிக்கைவிட்டபின்-ஜீவானந்தம் தலைவணங்கி நின்றாராம்? இது உண்மையா? பதில் கிட்டுமா ஜீவானந்தரிடமிருந்து?"** என்பதாக 1-7-54 'முயற்சி' பத்திரிகையில் ஒரு தோழர் மிக அழகாகக் கேட்டிருந்தார். இன்றுவரையிலும் மறுமொழியில்லை. புதுமைப் பெண்ணுக்கு அன்புக் கடிதம் தீட்டும் ஜீவானந்தர்களிடமிருந்து! ஏன் இல்லை? அன்றுமட்டுமல்ல அண்மையில் நடைபெற்று முடிந்த சென்னை தேசியக் கௌன்சில் கூட்டத்தில் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் என்ன பேசினார்கள். இவர்களுடைய கருத்துக்களை ஏனைய தொண்ணூற்றூறு கௌன்சில் உறுப்பினர்களும் கேட்டார்களா? இதற்காவது 'ஜனசக்தி'யார்கள் விளக்கம் தருவார்களா என்று எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருப்போம்.

திராவிட நாட்டுப் பிரிவினைக் கொள்கையை ஒப்புக்கொள்ளாத 'அகில இந்தியாக்கள்' - தமிழ்நாட்டுக் கமிட்டியின் அரசியல் தத்துவஞானி பிளேட்டோ எனப் போற்றத் தகும் கே. டி. ராஜு என்பவர், "வடக்கு வாழுது, தெற்கு தேயுது என்றும், நாடு பிரிய வேண்டுமென்றும் கூறுவதெல்லாம் சுத்த ஹம்பக்" என்று 1-10-'58 ல் சென்னை ராபின்சன் பூங்காப் பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார். கழகத்தின் சார்பிலே இதுவரையிலும் சொல்லிய - இனிமேல் சொல்லப்போகிற காரணங்கள் இருக்கட்டும் - இப்போதைக்குப் பின்வரும் கருத்துக்களைக் காணுங்கள்.

1. "நம்முடைய தாயகத்திற்குச் சுதந்திரம் என்றால் இன்னொருவருடைய பிரதேசத்தைக் கைப்பற்ற வேண்டும் அல்லது அதன்மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பது சுதந்திரத்தின் பொருளல்ல. சுதந்திரத்தின் கருத்தும் ஆகாது"

2. சர்வஜன ஓட்டுரிமையின் அடிப்படையில் தங்களது தாயகத்தைக் கண்ணெனக் காப்பதுடன் பொதுவான நலன்களைப் போற்றி வளர்க்கவும் முடியும். நாங்கள் ஜனநாயக் வாதிகள் அந்தந்தப் பிரதேசத்து மக்களின் தீர்ப்பை ஒப்புக்கொள்வதற்கும் நாங்கள் தயார்."

3. நம்முடைய நாட்டு ஜனங்கள் அனைவருக்கும் வெவ்வேறு சுதந்திர தாயகம் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் புராதனப் பண்பிருக்கிறது. ஒவ்வொரு பகுதிக்கும் சிறப்பான நவீன காவிய ஓவியங்கள் வளர்ந்து வருகின்றன. மேலும் அவர்களுடைய தாயகங்கள் பொருளாதாரத் துறையில் இயற்கையாக ஒன்றுபட்டு இயங்கக் கூடியவைகளாக அதற்குத் தக்க போக்குவரத்து வசதிகளையும், பாகுபாடு செய்யப்பட்ட தொழில்களைக் கொண்டதாகவுமிருக்கின்றன."

4. அந்தந்தப் பிரதேசத்து மக்கள் தங்களுடைய தலைவிதியை, சுதந்திர வாழ்க்கையைத் தரமாகவே முடிவு செய்து கொள்வதற்கு விட்டுவிடுவதே பொதுஜன விருப்பம். மற்றெல்லாவற்றையும்விட அத்தகைய அரசாட்சி அந்தஸ்தைப் பொது ஜனங்கள் பெறவேண்டுமென்பதே எங்கள் கட்சி கூறி வருவதாகும்."

இந்த நான்கு பொன்மொழிகளையும் மீண்டும் ஓர் முறை படித்துப் பார்த்துவிட்டுக் கே. டி. ராஜுவைக் கேட்போம்: நாடு பிரிய வேண்டுமென்பதற்கு கழகம் சொல்லுவது போல கம்யூனிஸ்ட் ராமமூர்த்தியும் சொல்லியிருக்கிறாரே - நீர் என்ன சொல்கிறீர் என்று?

"சுகவாழ்வளிக்கும் சுதந்திர இந்தியாவிற்காக" என்ற புத்தகத்தைத் தோழர் பி. ராமமூர்த்தி அய்யர் அவர்கள்தான் 1945 ம் ஆண்டில் அச்சிட்டுத் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வெளியிட்டிருக்கிறார். தாயகங்கள் பிரிந்து வாழவேண்டும் என்பது கட்சியின் குறிக்கோள் என்று மிக மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்! 1958 ம் வருடத்து ராமமூர்த்திகளும், ராஜுக்களும், மாஜினிகளும்-மீண்டும் ஓர் முறை படித்துத் தெளியுற வேண்டுமென்பது திராவிட முன்னேற்றக் கழகத்தவரின் இதயவேட்கையாகும். நீங்கள் சந்திக்கின்ற கம்யூனிஸ்டுகளிடத்திலே-ஏனைய பிரிவினையைத் தீதென்று கடிந்துகொள்ளும் நண்பர்களிடத்திலே நான் விடுக்கும் அன்பழைப்பையும் கொடுத்துவிடுங்கள். அவர்கள் மீண்டும் ஓர்முறை கொள்கை விளக்கம்பெற ஏதுவாக இருக்கும்.

திராவிட முன்னேற்றக் கழகம் தென்னகத்தின் விடுதலை இயக்கம். பத்தாம் ஆண்டுப் பயணத்திலேயிருக்கும் பாசறை. கடந்துவந்த ஒன்பதாண்டுகள் ஒப்பற்றவை. செய்து முடித்துள்ள காரியங்கள் எல்லாம் திராவிட மக்களின் நலன் தேடிய நல்ல செயல்கள்; இங்கே குறிப்பிட்டுக் காட்ட இயலாதவை! இன விடுதலையை ஏற்காத, மொழியார்வத்தைப் பாராட்டாத, அரசியல் அடிமைத்தனத்தை வரவேற்கின்ற, சமுதாயச் சகதியிலும் சாதிச் சாக்கடையிலும் புரளுகின்ற இந்த நாட்டுத் தேசியத்தார், எங்கோ இருப்பவர்களுக்குப் பராக்குக் கூறும் பஞ்சப்புத்தி, நேற்றுச் சொன்னதை இன்று மறுக்கும் நேர்மையற்ற தன்மை, இன்றைய 'தவறை' நாளைய 'சரி', யாக்கும் சுலபம், நாளைய 'சரி'யை, நாளைக்கு மறுநாள் 'தவறுக்கும்' தகைமை, இவைகளிலே உழலும் புதுப் பொதுவுடமை வாதிகள், 'உரிமைக்கு வேங்கடம் உறவுக்கு இமயம்' என்று பேசுகிற 'இந்தியத் தமிழர்கள்', எதையெதையோ எதிர்பார்த்து எதுவும் கிடைக்காமல் ஏமாந்துவிட்ட ஜனநாயக சீர்திருத்தக் கமிட்டிகள், "நாங்களும் ஆளுவோம் - எவர்க்கும் எடுபிடிகளாவோம்" என்று கூறுகிற பிரஜா-சோசலிஸ்டுகள், இட்டலிப் போராட்டத்திலிருந்து நாம் தமிழராகியிருக்கும் 'புலித்தேவர்கள்', "எரிப்போம் எரிப்போம்" என்று எச்சரிக்கைகளிலே உலவுகின்ற ஈரோட்டு ஏந்தல்கள், ஆகியோரெல்லாம் எண்ணிப்பார்க்காத திராவிடத்தின் நலத்தை அடிப்படையாக வைத்துப் பணியாற்றுகிறது திராவிட முன்னேற்றக் கழகம். அகில இந்திய பக்தர்கள், பாரத மாதாவின் பாதம் தாங்கிகள், அகில உலக உறவுக்காரர்கள் எல்லோருக்கும் இந்திய உபகண்டம் இப்போது ஒரு தாயகம்! பல்வேறு தேசிய இனங்களைக்கொண்ட ஒரு கூடாரத்தில் ஒரே பண்பையும் செழுமையையும் பெற்றுத் தென்னகம் தனி நாடென்று நிலைநாட்டியிருப்பது திராவிட முன்னேற்றக் கழகம்!

திராவிட இனத்தவர் கலையிலும் நிலையிலும் புகழ்பெற்றவர், மொழியிலும், வழிவகையிலும்வடவரினும் மேம்பட்டவர். வேண்டாம் இந்தப் பிரிவினை என்போர் அலகபாத் வீரர்களும்-அமிர்தசரஸ் அன்பர்களும்-அவர்கள் இனவரலாற்றைப் பொறுத்தவரை விழிகள் பழுதுள்ளோராவர்! வடவரைவிட நல்ல திறனிருந்தும் அகில இந்தியக் கட்சியென்ற கடிவாளத்தால் தமிழ்நாட்டுத்தலைவர்கள் பலர், தலை கவிழும் நிலையைக் காண வருந்துகிறது நம் கழகம்! தென்னாட்டின் வாழ்வும் தாழ்வும் வடநாட்டிலே செழித்து வரும் பொருளாதாரப் பெருக்கத்திலே பின்னிக் கிடப்பதின் காரணத்தால்தான் கழகம் இந்தப் பிரச்னையைத் தனது அரசியல் கிளர்ச்சியில் ஒரு அங்கமாக வைத்துள்ளது. கழகம் சொல்லும் காரணங்களை மறுக்கமுடியாமல் சரியான சான்று தர இயலாமல் சாவடிகளில் ஒதுங்கி நிற்கும் 'அகில இந்தியக் காவடிகள்தான் டில்லித் தேவதைகளின் சேவ்டி தாங்கி நிற்கிறார்கள்! அரசியல் மேதைகளும் விற்பன்னர்களும், வடநாட்டின் வளப்பெருக்கத்தினால் வஞ்சிக்கப் படுவது தென்னாடு என்ற உண்மையை ஏற்றுக்கொண்டனர். இமயம் முதல் இங்குள்ள குமரி முனை இறுதியாக சமநிலை இல்லையென்பதைக் காங்கிரஸ் பெருந்தலைகள் கூட சுய உணர்ச்சி வரும்போது ஒப்புக்கொள்கிறார்கள். அமைச்சர்கள் கண்ணீர் வடித்திருக்கிறார்கள். கேரளத்திற்குப் பாரபட்சம் என்று கம்யூனிஸ்டுகளும் கணை விடுக்கிறார்கள். தாழ்த்தப்படும் தென்னாட்டு விடுதலைப் போர்ப் புயலின் வளர்ச்சி "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற திட்டம் இலங்கைக் கடலோரத்திலே நின்று, தமிழர்கள் தாயகத்தை ஏக்கத்துடன் நோக்கிச் சிந்திடும் இரத்தக் கண்ணீர்த் துளிகளைக் கொண்டு எழுதப்பட்டிருப்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சிய வரலாறு! நாட்டுப் பிரிவினையும் கூட்டரசும் அகில இந்தியப் பிடியிலேயும், பாரத மாதாவின் மடியிலேயும் மயங்கிக் கிடக்கும்வரை மருட்சியூட்டக்கூடியவைகளே! சொந்தத் தாயகமாம் திராவிடத்தின் விடுதலைப் போரில் தலை அறுத்துக் கொடுக்கவும் தயங்காத இலட்சியப் படையினரின் கருத்தில் வேற்றுமைகொண்டோர் தயைகூர்ந்து திருந்திக்கொள்ளட்டும். தங்களது தீப்பண்புகளைத் திருத்திக்கொள்ளட்டும். கலை, மொழி, பண்பு, இலக்கியம், அரசியல் உரிமைகளைக் கழகம் சொல்கிறதென்ற காரணத்தை மறந்து சொந்தப் பிரச்னையாகக் கருதி அணுகுங்கள்-சிந்தனையுடன் செயலாற்றுங்கள்! இந்த விடுதலை விழாப் போராட்டத்தின் இறுதிப் பகுதியை திராவிட முன்னேற்றக் கழகம் வீரம் நிறைந்த வரலாறாக எழுதிக் காட்டும். அந்த வரலாற்றின் தலைப்புத்தான் "திராவிட நாடு திராவிடர்க்கே" என்பதாகும்!

—கூடலரசன்

ராஜபார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.

வெண்பாப் போட்டி-29.

ஈற்றடி :

எற்றேமற் றெற்றேமற் றெற்று.

முடிவு தேதி 1-11-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

வெண்பாப் போட்டி

28. பத்தரையும் சித்தரையும் பார்.

சாதிக்கே ஆதாரம் சாத்திரமாம், பூநூலர்
வேதியர்க்(கு) ஆதாரம் வேதமாம்—மேதினியில்
எத்தர்யார்; முத்தர்யார்; யாவும் வெளிமயக்கே
பத்தரையும் சித்தரையும் பார்.

—அரமா. முத்து, கடலூர் முதுநகர்.

மந்திரங்கள் ஓதுவதால் மாதேவன் பூசையினால்
உந்துமெனில் நன்மையெலாம் இவ்வுலகில்—பைந்தொடியே
நித்தங் கொடும்பிணியால் நல்குரவால் வாடுவதேன்
பத்தரையும் சித்தரையும் பார்.

கார்த்திகாதேவி, கமுதி.

பத்தரிசி கேட்டழுதோம்; பொத்துக வாயென்று
மொத்தி விரட்டினார் முந்தாம்நாள்—இத்தினமும்
மெத்தநலம் கோயிற்காம்! மாய்கின்றோம் தேவா! உன்
பத்தரையும் சித்தரையும் பார்.

அ. தங்கவேலன், காரைக்கால்.

மாதரெலாம் பேயென்றார்; மாநிலமே மாயமென்றார்
வேதமொன்றே போதுமென்று வீணானார்—காதலியே!
முத்ததர மோகினியே! மூள்காதல் மாண்பறியாப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—மலையமான், முதுகுளத்தூர்.

காவியணி பூண்டிருப்பார்; கற்சிலையைத் தான்தொழுவார்;
பாவமெலாம் செய்திடுவார்; பார்ப்பதற்கோ—மூவாசை
அற்றவர்கள் போலிருந்தே ஆரணங்கைத் தேடுமிந்தப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—எழிலூரான், சுந்தராபுரம்.

இங்கிருப்போர் வாழ்விற்கே இன்னமுது வேண்டுமென்றால்
அங்கிருக்கும் 'அய்யனை' வேண்டுகின்றார்—சங்கமைச்சர்
சொத்தைக் கொடுத்துவிட்டுத் தூக்குகின்றார் காவடியை!
பத்தரையும் சித்தரையும் பார்.

—வானம்பாடி, முசிறி.

வாட்டுகின்றார்; ஆட்டுகின்றார்; வண்டமிழை ஓட்டுகின்றார்;
நாட்டுகின்றார் அஞ்ஞானம்; நஞ்சுநெஞ்சம்—காட்டுகின்றார்;
அத்தனையும் மாய்ந்தொழிந்து அன்றேபோல் நாம்வாழ;
பத்தரையும் சித்தரையும் பார்.

— அ. வே. காசிநாதன், அமிர்தராயன்கோட்டை.

தண்மதியை முத்தமிடத் தாவுபொறி செய்துபல
விண்ணோச்சி வீசுகிறார்; விந்தையன்றோ?—நுண்கலையில்
வித்தகரின் சித்தனைகள் மேலோங்கு மிந்நாளில்
பத்தரையும் சித்தரையும் பார்.

—அ. சு. முருகேசன், மேலச்சிவபுரி.

அந்திப் பொழுதினிலே ஆற்றங் கரைசென்று
சந்தித்துக் காதலியைச் சாந்தமுற—முந்தியும்
பத்தனென வேடமிட்டு பாரினிலே கெட்டலையும்
பத்தரையும் சித்தரையும் பார்.

—க. செல்லையா, பாப்பாம்பட்டி.

கிள்ளைத் தமிழணங்கைக் கொல்லத் துணிகின்ற
புல்லரினைப் போட்டுப் புதைத்தபின்னர்—கள்ளமுள்ள
பொத்தும் பசுத்தோலாம் பொல்லாத காவியுடைப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—தென்றல் ராமலிங்கம், சென்னை-6.

எத்தனையோ இன்பங்கள் இவ்வுலகில் தானிருக்க
அத்தனையும் விட்டுவிட்டு ஆலயத்தைச்—சுற்றிவந்து
பித்தம் தலைக்கேறி பிச்சை எடுக்கின்ற
பத்தரையும் சித்தரையும் பார்.

—"பழனிராதா", கும்பகோணம்.

சத்திரத்துச் சாமிகளாய், சேயிழையே! ஞானத்தின்
நித்திரையில் உண்மை நிலைகண்ட—வித்தகனும்
புத்தரையும் இத்தரையில் போற்றாமல் வாழ்கின்ற
பத்தரையும் சித்தரையும் பார்.

—ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

வேதம் புராணம் விளம்பிடும் பல்பிறப்பு
ஏகமுறு சாத்திரங்கள் எண்ணிறந்த—ஓதியே
எத்தராய், மக்களை ஏய்த்துக் கொழுக்கின்ற
பத்தரையும் சித்தரையும் பார்.

—கு. நன்னன், புதுவை.

கன்னல் மொழியென்றால் காவியமும் பாவலரும்
தென்னவனே உண்டோநீ செப்பிடுவாய்—என்போனே!
சித்தங் களிக்கவே செந்தமிழில் பாடிவைத்த
பத்தரையும் சித்தரையும் பார்.

—சின்னக்குழந்தை, வேலூர்.

பொன்னணியில் பித்தளையை பொய்மனத்தோர் சேர்த்திடுவர்
அன்னவரை ஒத்தவரே பட்டினத்தார்—மின்னொளியே
நித்திலமாம் பெண்ணினத்தை நேர்மையின்றிப் பேயென்ற
பத்தரையும் சித்தரையும் பார்.

—ச. கலைவாணி, திருபுவனைபாளையம்.

முத்திதரும் சக்தியென முக்கண்ணனைத்தொழுவார்
சித்தத்தை வேசியர்பால் சேர்த்திடுவார்—இத்தரையில்
சொத்தைப் புராணங்கள் சொல்லிடுவார் அந்தோ! இப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—புவிமுதல்வன், சுண்ணாம்புகுளம்.

புத்தே(ள்) உலகத்தில் முத்தியுண்டு மானிடரே!
சத்தியமாய்ச் சாற்றுகிறேன் என்பாரைக்—கொத்திவிட்(டு)
இத்தரையில் புத்தொளியைப் பாய்ச்சுகின்ற புத்துலகப்
பத்தரையும் சித்தரையும் பார்.

—க. சி. சு. மணியன், கோவை-4.

உள்ளொன்று வைத்து உழைக்காது பொய்கூறிக்
கள்ளரவர் வாழ்கின்றார் காட்டிடவோ?—கள்விழியே!
கத்துகடல் சூழுலகில் காவியுடைக் குள்ளிருக்கும்
பத்தரையும் சித்தரையும் பார்.

—ப. வே. இராமசாமி, முகவை.

"ஆண்டவன் தாளினை யாவர்க்கும் காட்டுவோம்
வேண்டுவன நல்கும் விறல்வலியோம்—காண்என
நித்தமும் தம்பெருமை நீணிலத்தில் பேசுகின்ற
பத்தரையும் சித்தரையும் பார்.

—க. சகுந்தலா, சிவகாசி.

சீர்திருத்த வள்ளுவனார் செப்பிய ஏடிருக்க
ஊர்கெடுக்கும் ஏடுகளை உண்டாக்கி—சீர்பெற்ற
முத்தமிழர் நல்வாழ்வை மூழ்கடித்தார் சண்டாளர்
பத்தரையும் சித்தரையும் பார்.

—வெ. சதிர்வேந்தன், சுந்தராபுரம்.

'என்னப்பன்' என்பார்க்கு நீயப்பன் ஆவானேன்
தின்னப் படைப்பானேன் தேன்படையல்—எண்ணியே
எத்தர்தம் சொற்கேட்டே ஏமாறும் ஏமாளி;
பத்தரையும் சித்தரையும் பார்.

—பொன். இலக்குமணதாசன், செவ்வாய்ப்பேட்டை.

ஜூபிடர்
அண்ணா பத்தி
JUPITER PERFUMERS
CITY
M.S.T.V. NEETHI MOHAN, MADURAI.
★
எங்கும் கிடைக்கும்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு

198389